**<u>11.08.2026</u>**

**<u>அசல் வழக்கு எண். 63 /2020</u>**

**<u>பி.வா.சா. 2 –</u>** திரு. புரட்சி செல்வன்.

**<u>சாட்சி முன்னிலையானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.</u>**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

1. உங்கள் சொந்த ஊர் காரி கோவில் என்றால் சரிதான். உங்கள் தகப்பனார் பெயர் பிச்சைப்பழம் என்றால் சரிதான். உங்கள் தகப்பனாருக்கு பார்வதி மற்றும் கனகரத்தினம் என 2 மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி மூலமாக 2 பெண் மக்கள் என்றால் சரிதான். 2ம் மனைவி மூலம் 2 பெண்மக்களும் நீங்களும் வாரிசுகள் என்றால் சரிதான். நீங்கள் காரி கோவில் வடக்கு தெருவில் வசித்து வருகிறிர்கள் என்றால் சரிதான்.

2. நீங்கள் மாற்று சமுதாயத்தை சார்ந்த அனுப்பிரியா என்பவரை விரும்பி திருமணம் செய்து கொண்டீர்கள் என்றால் சரிதான். மேற்படி அனுப்பிரியா நர்ஸ் ஆக பணிபுரிந்தார் என்றால் சரிதான். அவர் ஊர் திசையன் விளையில் உள்ள மனலிவிளை என்றால் சரிதான். அனுப்பிரியா மூலம் முத்து பரிஷத் என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். அதன் பின்பு முதல் மனைவி வேறு ஒருவருடன் சென்று விட்டார் என்றால் சரிதான். பின்பு நீங்கள் 2ஆவதாக புத்தன்தருவையை சார்ந்த சோபியா என்பவரை திருமணம் செய்து கொண்டீர்கள் என்றால் சரிதான். அவர் மூலம் முத்து பரத் என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான்.

3. நீங்கள் உடை மரங்களை வெட்டி விற்பனை செய்யும் தொழில் செய்கிறீர்கள் என்றால் சரிதான். தேவராஜ் என்பவர் உங்கள் தாய்மாமா என்றால் சரிதான். தேவராஜ் என்பவர் வழக்கு பிரதிவாதி சத்தியபாலா என்பவரின் உடன் பிறந்த சகோதரி பானுமதி என்பவரை திருமணம் செய்தார் என்றால் சரிதான். சத்தியபாலா உங்களுக்கு நெருங்கிய உறவினர் என்றால் உறவினர்தான்.

4. வழக்கு வாதிகள் காரி கோவில் ஊரை சார்ந்தவர் என்றால் சரிதான். அவர்கள் காரிகோவில் தெற்கு தெருவில் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். உங்கள் ஊரில் முத்தாலம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு 1ம் வாதி 2002 முதல் 2005 வரை மேற்படி கோவிலில் நிருவாகஸ்தராக இருந்து வந்தார் என்றால்

CHANDRASEKAR
ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.08.11 17:10:13 +0530

சரிதான். அந்த கோவிலில் வருடம் ஒரு முறை கொடை விழாவும் ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளி சிறப்பு பூஜை மற்றும் விளக்கு பூஜை நடைபெறும் என்றால் சரிதான்.

5. 2005ம் ஆண்டிற்கு பின்பு வழக்கு பிரதிவாதியின் தகப்பனார் துரைராஜ் மற்றும் பாலசுப்பிரமணியன் ஆகியோர் மேற்படி கோவிலில் நிருவாகஸ்தர் என்றால் சரிதான். இவர்கள் பதவியேற்ற பின்பு விளக்கு பூஜை நடைபெறுவது கிடையாது என்றால் சரியல்ல. விளக்கு பூஜை நடைபெறாததால் 1ம் வாதி, பிரதிவாதி தகப்பனாரிடம் கேட்டு தாவா ஏற்பட்டது என்றால் சரிதான்.

6. உங்கள் ஊரில் ஆதிதிராவிடர் தரப்பினர் வீடு கட்டும் சமயம் துரைராஜ் மற்றும் பிரதிவாதி வீடு கட்டகூடாது என தடுத்தார்கள் என்றும் ஆதிதிராவிடர் தரப்பினருக்காக 1ம் வாதி பேசியதால் தாவா ஏற்பட்டது என்றால் சரிதான். 1ம் வாதி நிருவாகஸ்தராக இருக்கும் போது கணக்கு காட்டவில்லை என்று காவல் துறையில் புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

7. நீங்கள் முதல் விசாரணையில் 1ம் வாதி கணக்கு வழக்கு காட்டாததால் தான் அவர் மாற்றம் செய்யப்பட்டார் என்று கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. ஒவ்வொரு வருடமும் கொடைவிழா முடிந்த பின்பு கணக்கு பார்ப்பது வழக்கம் என்றால் சரிதான். அதன்படி 1ம் வாதி நிருவாகஸ்தராக இருக்கும் போது முறையாக கணக்கு வழக்கு பார்த்தார் என்றால் சரியல்ல.

8. தில்லைராஜ் என்பவர் உங்களுக்கு என்ன உறவு என்றால் மச்சான் அத்தை மகன். அவர் தோப்பில் வயர் வெட்டியதாக போலிசாரிடம் புகார் கொடுத்தது உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். அதுசம்பந்தமாக 2ம் வாதி பெயரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். 2ம் வாதி பெயருக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று பொய்யாக வயர் வெட்டியதாக கூறினீர் என்றால் சரியல்ல.

9. சத்தியபாலன் என்பவர் வாதிகள் மீது 2010ம் வருடம் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் வாதிகள் இருவரும் கைது செய்யப்பட்டார் என்றால் சரிதான். அப்பொழுது கைவிலங்கு போட்டு வாதிகளை அழைத்து சென்றார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. அவர்கள் கைது செய்யப்பட்டு 3 நாள் சிறையில்

CHANDRASEKAR ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.08.11 17:10:20 +0530

அடைக்கப்பட்டிருந்தார் என்றால் சரிதான்.

10. வாதிகளுக்கும் பிரதிவாதிக்கும் இடையே தகராறு ஏற்பட்டதாக கூறும் சம்பவம் குறித்து நேரில் தெரியாது என்றால் சரிதான். வாதிகள் இருவரையும் காவல்துறையினர் கைது செய்து அழைத்து செல்லும் போது ஊரில் அனைவரும் பார்த்தார்கள் என்றால் சரிதான். சத்தியபாலாவிற்கும் வாதிகளுக்கும் இருக்கும் முன்பகை காரணமாக தான் சத்தியபாலன் பொய் புகார் கொடுத்து வாதிகளை கைது செய்தார்கள் என்றால் சரியல்ல.

11. நீங்கள் சத்தியபாலனுக்கு உறவினர் பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றும் முதல்விசாரணை சாட்சியம் பொய் என்றால் சரியல்ல.

CHANDRASEKAR ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.08.11 17:10:26 +0530

<u>மறுவிசாரணை –</u> **இல்லை**